# இந்தியாவும் ஆர்மேனியாவும் அரசியல் மற்றும் பொருளாதார ஆலோசனைகளை நடத்தின

இந்தியாவும் ஆர்மேனியாவும் தங்களது 7வது வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை, அரசுகளுக்கிடையேயான ஆணைய்த்தின் 6வது கூட்டத்துடன் புதுதில்லியில் செப்டம்பர் 25 மற்றும் 26ந்தேதிகளில் நடத்தின.

ஆர்மேனியாவிற்கான வெளியுறவுத் துணை அமைச்சர் மேதகு செர்ஜி டி. மானசரியன் மற்றும் வெளியுறவுத்துறையின் செயலர் (கிழக்கு) திரு அசோக் கந்தா ஆகியோர் செப்டம்பர் 25ந்தேதி உயர் மட்ட அளவிலான வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை விரிவான முறையில் நடத்தினர். இரு தரப்பு உறவுகள் தொடர்பான அனைத்து விதமான விவகாரங்கள் குறித்தும் அப்போது மறுஆய்வு செய்யப்பட்டது. பிராந்திய மற்றும் சர்வதேச சூழல் குறித்து அவர்கள் விவாதித்தனர். நடப்பு சர்வதேச சூழல் குறித்தும் கருத்துக்களை பரிமாறிக்கொண்டனர்.. இரு நாடுகளும் சர்வதேச அமைப்புகளில் வழங்கிவரும் நெருங்கிய ஒத்துழைப்பு குறித்து மனநிறைவினை வெளிப்படுத்தின.

வாணிபம், பொருளாதாரம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், கலாசாரம் மற்றும் கல்வி ஒத்துழைப்பு தொடர்பான இந்தியா-ஆர்மேனியா அரசுகளுக்கிடையேயான ஆணையத்தின் (ஐ.ஜி.சி) 6வது அமர்வும் புதுதில்லியில் செப்டம்பர் 25-26 தேதிகளில் நடைபெற்றது. தகவல் தொழில்நுட்பம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுகாதாரம், மேம்பாட்டு ஒத்துழைப்பு, சுற்றுலா மற்றும் உள்நாட்டு விமானப்போக்குவரத்துத் துறை மற்றும் கலாசாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் தற்போது நடைபெற்று வரும் ஒத்துழைப்பு குறித்து இந்த கூட்டத்தில் மறு ஆய்வு செய்யப்பட்டது. தற்போது விவாதிக்கப்பட்டு வரும் இரு தரப்பு ஒப்பந்தம் குறித்து விரைவாக இறுதி செய்யவும் அவர்கள் ஒப்புக்கொண்டனர். இந்த அமர்வின் வெளிப்பாடுகள் குறித்த நெறிமுறை உடன்படிக்கையில் இரு தரப்பின் தலைவர்களான மேதகு செர்ஜி டி. மானசரியன் மற்றும் திரு அசோக் கந்தா ஆகியோர் கையெழுத்திட்டனர்.

**புதுதில்லி**
**26செப்டம்பர் 2013**